செ.வெ.எண். 33/டிசம்பர் நாள் :22.12.2020

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் சமையலர் மற்றும் துப்புரவாளர் பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.பி.கார்த்திகா, இஆப., அவர்கள் தகவல்.**

தருமபுரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளுக்கு 32 சமையலர் பணியிடங்கள், 14 துப்புரவாளர் (தொகுப்பூதியம்) மற்றும் 1 துப்புரவாளர் (காலமுறை) காலிப்பணியிடங்களை நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர் தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சமையலர் பணியிடத்திற்கு அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமைத் தரப்படும், 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும், தருமபுரி மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த தகுதியுடைய நபர்கள் தருமபுரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று நேரடியாகவோ, பதிவஞ்சல் மூலமாகவோ மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு 29.12.2020 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.பி.கார்த்திகா, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**

.